**தலைப்பு – 127 தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

---

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 221 | தொழில் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும்

என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| **தலைப்பு** | **திணைக்களப் பெயர்** | **முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 127 | தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு | 2015.07.08 |
| 221 | தொழில் திணைக்களம் | 2015.06.24 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,776.5 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 1,669.6 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 19.1 மில்லியன் மற்றும் ரூபா 87.8 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 7.2 சதவீதம் மற்றும் 5.8 சதவீதம் ஆகக் காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 127 | 264.8 | 245.7 | 19.1 | 7.2 |
| 221 | 1,511.7 | 1,423.9 | 87.8 | 5.8 |
| மொத்தம் | 1,776.5 | 1,669.6 | 106.9 | 6.0 |

### 2.2 முற்பணக் கணக்குகள்

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 127 | 5.5 | 5.3 | 2.0 | 3.5 | 20.0 | 15.6 |
| 221 | 100.0 | 76.1 | 45.0 | 72.9 | 295.0 | 237.7 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளின் மீதி ரூபா 0.25 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 743.9 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு | 6000/0000/00/0015/0040/000 | 1.2 |
| - மேற்படி - | 6000/0000/00/0015/0175/000 | 14.1 |
| தொழில் திணைக்களம் | 6000/0000/00/0015/0102/000 | 728.3 |
| - மேற்படி - | 6000/0000/00/0006/0029/000 | 0.3 |
| மொத்தம் | | 743.9 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிஅறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறுவுகள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 4 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 127 – தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (உ) | மோட்டார் வாகனப் பட்டியல் | நிதிப்பிரமாணம் 1647(உ) | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---------------------------------

**3.2.1 பாதீட்டு முரண்கள்**

-----------------------------

17 செலவின விடயங்களுக்காக ரூபா 12,913,268 கூட்டுத்தொகையான மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.3 பொது வைப்புக் கணக்கு**

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 1,032,664 கூட்டுத்தொகையான 02 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சின் செயற்திட்ட செயலகத்தில் ''அங்கவீனமுற்ற நபர்களுக்கு வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்கு'' சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் 2012 திசெம்பர் 10 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 300,000 தொகை அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பயன்படுத்தப்படாது 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---------------------------------------------------------------------------------------------------------------------------

12701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 824,013 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகள் 01 வருடம்

முதல் 04 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து காணப்பட்ட போதிலும் அந்தக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

அமைச்சில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

அமைச்சிற்குச் சொந்தமான 06 வாகனங்கள் ஓடக்கூடிய நிலையில் காணப்படாமையினால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தமை 2014 ஆம் ஆண்டின் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றை நிதிப்பிரமாணம் 772 இன் படி கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

நிதிப் பிரமாணம் 1647(ஆ) இன் பிரகாரம் வாகனங்களும் அவற்றின் உபகரணங்களும் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சால் வாகனங்களின் உபகரணங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2015 யூன் 16 ஆந் திகதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

நீதி அமைச்சிற்கு 2015 பெப்ரவரி 26 ஆந் திகதி எடுத்துச் செல்லப்பட்ட 03 வாகனங்களை மீண்டும் அமைச்சிற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

---

அமைச்சிற்கு நீதி அமைச்சிலிருந்தும், விளையாட்டுத்துறை அமைச்சிலிருந்தும், கமநல சேவைகள் திணைக்களத்திலிருந்தும் மற்றும் தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகம் போன்ற நிறுவனங்களிலிருந்து கிடைத்த 06 வாகனங்கள் சட்டரீதியாக 2015 யூன் 16 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

---

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 1,310,172 ஆக இருந்ததுடன், அவை ஓராண்டிற்கு குறைந்த காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்தது. இரண்டு செலவின விடயங்களுக்குரிய ரூபா 193,602 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.7 செயலாற்றல்**

---

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நம்பிக்கையுள்ள தகவல்களை பகிர்ந்தளிக்கும் நோக்கில் 4 தொழிலாளர் கெஸட் தயாரித்தல் மற்றும் பகிரங்கப்படுத்துதல் இலக்கிடப்பட்டிருந்ததுடன் 2 கெஸட் மாத்திரம் 2014 ஆம் ஆண்டின் போது பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) தேசிய மட்டத்தில் 10 முத்தரப்பினர் கூட்டங்களை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் ஆண்டில் 4 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(iii) செயற்திட்ட செயலகத்தினால் சம்பளத்துடன் (முறையான) வேலைவாய்ப்பு விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 04 செயலமர்வுகளையும் சேவை நிலையங்களில் ஒழுக்காறுகளை மேம்படுத்தும் நோக்கில் 02 ஊழியர் பயிற்சி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் அந்த செயலமர்வுகள் முழுமையாக நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

-----------------

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 2014 இன் இறுதிக் காலாண்டில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்ட அறிக்கையொன்றை வெளியிடுவதற்கு ரூபா 732,664 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாது அது நிதி அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.8 நட்டம் மற்றும் இழப்புக்கள்**

-------------------------------------

அமைச்சின் 07 வாகனங்களுக்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட 07 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதன் மூலம் ஏற்பட்ட நட்டமான ரூபா 10,387,453 ஐ தீர்ப்பதற்கு 2015 மே 12 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) முறையான அங்கீகாரமின்றி தொழிலாளர் மற்றும் தொழிலால் உறவுகள் அமைச்சர் அலுவலகம் மற்றும் பிரதியமைச்சர் அலுவலகம் என்பவற்றை அலங்களிப்பதற்காக வாரத்திற்கு இரு தடவை வீதம் இயற்கை மலர்களைக் கொள்வனவு செய்வதற்கு 2014 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 226,600 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரதி அமைச்சரின் வேண்டுகோளின்படி, முறையான அங்கீகாரமின்றி 9500 புதவருட வாழ்த்து அட்டைகளை அச்சிடுவதற்கு அமைச்சால் ரூபா 139,000 தொகை 2014 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

## 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2014 யூன் மாதத்தின் போது ரூபா 13,451,562 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் 2014 ஒக்தோபர் மாதத்தின் போது விபத்துக்குள்ளாகி 2015 யூன் 29 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்க்கப்படாது கராஜில் வைக்கப்பட்டிருந்தது.

## 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 12 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 71 | 52 | 19 |
| (iv) | ஆரம்ப நிலை | 31 | 22 | 09 |
| | மொத்தம் | 121 | 90 | 31 |

மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 31 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட மனித வளங்கள்**

அமைச்சால் 4 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூன்று வருட காலத்திற்காக மீளாய்வாண்டின் போது தேசிய ஊழிய கற்கை நிறுவகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 4. தலைப்பு – 221 – தொழில் திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | ஆளணி சம்பளப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 இன் படி | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) இன் படி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 இன் படி | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

## 4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 4.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ஏற்படும் செலவினம்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 474,600,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏந்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களாக முறையே ரூபா 393,006,045 தொகையும் ரூபா 48,597,302 தொகையும் ஆக ரூபா 441,603,347 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட செலவினம், தொழில் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கிலும், ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதிக்கூற்றுக்களிலும் பதியப்பட்டமையினால் ஒரு செலவினம் வெவ்வேறான இரண்டு நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டிருந்தது.

(ii) நிதியத்தின் செலவினங்களை மீளளிப்புச் செய்தல் தொடர்பாக எவ்வித பதிவுகளோ அல்லது இந்த செலவினம் பெயரளவிலான செலவினமாகவேனும் ஒதுக்கீட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதியத்திற்காக ஏற்படுகின்ற செலவினம், இலங்கை மத்திய வங்கியினால் மீளளிப்புச் செய்தல் மூலம் இந்த நிதியத்திறற்கு சுயாதீனமாக செயற்பட முடியும் என சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதும், இரண்டு நிறுவனங்களில் கணக்கீட்டு நடைமுறைகள் பின்பற்றப்படுவதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டிற்காக இலங்கை மத்திய வங்கியிலிருந்து மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 76,201,235 தொகை தொடர்பில் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 31 செலவின விடயங்களில் ரூபா 77,637,931 மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**4.3 பொது வைப்புக் கணக்கு**

-----------------------------------

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 133,323,434 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 12 வருடங்கள் முதல் எந்தக் கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படாத 6000/0000/00/0066/0029/000 ஆம் இலக்க குடிவரவு நிதியத்தின் வங்கிக் கணக்கில் ரூபா 311,295 தொகையான மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒவ்வொரு மாதத்திற்காகவும் பொது 71 மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புப் பொழிப்புக் கூற்று அடுத்துவரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

-----------------------------------------------------------------------------------------------------------

22101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான காலப்பகுதி முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 5,203,635 கடன் மீதியினை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 4.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது.

| சொத்து விடயம் | கொள்வனவு செய்வதற்கான காரணம் | அளவு | கொள்வனவு செய்யப்பட்ட திகதி | பெறுமதி<br>ரூபா | விளைவற்று/ குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றதா என |
|---|---|---|---|---|---|
| Access Point | தொழிலாளர் பரிசோதனை, முறைபாடுகள் மற்றும் வழக்குகள் கணனி மயப்படுத்தல் | 16 | 2014.09.24 | 94,400 | திட்டமிடல் பிரிவின் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத் தப்பட்டமையால் விளைவற்றுக் காணப்பட்டது. |
| USB Adapter | - மேற்படி - | 112 | 2014.09.24 | 224,000 | |
| கணனிகள் | வட கொழும்பு மாவட்ட தொழில் | 08 | 2013 | சர்வதேச தொழிலாளர் | 04 கணனிகள் விளைவற்றும் 04 |

| | | |
|---|---|---|
| அலுவலகத்திற்கு தொழிலாளர் பரிசோதனை, முறைப்பாடுகள் மற்றும் வழக்குகளை கணனி மயப்படுத்தல் | அமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. | கணனிகள் குவைான பயன்பாட்டுடனும் 2014.09.24 ஆந் திகதியில் காணப்பட்டது. |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்**

---------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்குச் சொந்தமான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 93 வாகனங்கள் காணப்பட்டதுடன் நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் 1647(ஆ) இன் பிரகாரம் சகல வாகனங்கள் தொடர்பாகவும் மெய்மையாய்வொள்று நடாத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்கத்தின் பிரதான விலை மதிப்பாளரின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதிய SAV/ML & LR/2012/01 ஆம் இலக்க விலை மதிப்பாளர் அறிக்கையின் பிரகாரம் 2014 சனவரி 01 இல் உள்ளவாறு திணைக்களத்தின் 47 சொத்து விடயங்களின் பெறுமதியான ரூபா 3,628,370,000 தொகை ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் ஆரம்ப மீதியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 செயலாற்றல்**

--------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரமும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமும் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஒக்தோபர் 31 ஆந் திகதிய 15/2007 ஆம் இலக்க தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் படி தொழில் உத்தியோகத்தரொருவர் மாதமொன்றில் ஆகக் குறைந்தது 20 காலரீதியான பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட வேண்டும். வடகொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் 12 தொழில் உத்தியோகத்தர்களினால் 2014 ஆம் ஆண்டின் போது ஒரு உத்தியோகத்தருக்கு 20 காலப்பரீட்சிப்பிற்கு குறைவாக மேற்கொள்ளப்பட்ட 50 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக காலப்பரீட்சிப்புக்கள் கைவிடப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 243 ஆகும். மேலும் அந்த சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு தொழில் உத்தியோகத்தராலும் பேணப்படுகின்ற தினப்பதிவேடு அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் உதவி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வட கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தின் 2014 ஆம் ஆண்டின் போது தினப்பதிவேடு கையளித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 120 சந்தர்ப்பங்களில் தினப் பதிவேடுகளைச் சமர்ப்பிப்பதற்கு 06 நாட்கள் முதல் 50 நாட்கள் வரையிலான காலவீச்சினை எடுத்திருந்தது.

(ii) 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 06/2011 ஆம் இலக்க தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் முறைப்பாடொன்று கிடைத்து 14 நாட்களுக்குள் அது பரீட்சிக்கப்பட்டு தீர்விற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் வட கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் கணக்காய்வுத் திகதியான 2015 சனவரி 29 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைத்த 103 ஆட்சேபனைகள் மற்றும் முறைப்பாடுகளை விசாரணை செய்து பூர்த்தி செய்வதற்கு 13 மாதங்கள் முதல் 30 மாதங்கள் வரையான காலப்பகுதியை எடுத்திருந்தது.

(iii) 2000 பெப்ரவரி 10 ஆந் திகதிய 6/2000 ஆம் இலக்க தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 1(iv) பந்தியின் பிரகாரம் நீண்ட

காலமாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத நிறுவனங்களை பரீட்சிப்பிற்காக முதலாவது தெரிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் வடகொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் 2012, 2013 மற்றும் 2014 என்ற மூன்று ஆண்டுகளினதும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படாத நிறுவனங்களின் எண்ணிக்கை 5,575 ஆக இருந்ததுடன் மேற்கூறப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்திற்குரிய நிறுவனங்களின் அளவில் 72 சதவீதமாக இருந்தது.

**4.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை நடைமுறைகளைப் பின்பற்றாமை**

---------------------------------------------------------------------------------------------------------------------

**மாவட்ட தொழில் அலுவலகத்திற்காக புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்**

------------------------------------------------------------------------------------------------------------------

ஐந்து (05) அலுவலகக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 199.62 மில்லியன் மத்திய காலப்பகுதி செலவின வகுதிக்குள் செலவிடும் சிபாரிசு 2011 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய NPD/HDC ஆம் இலக்க தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

கட்டிடத் திணைக்களத்திற்கு 03 அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு திணைக்களத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருந்த போதிலும் திணைக்கள கொள்வனவுக் குழுவினால் 05 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூறுவிலை கோரும் போது இரண்டு தொழில் அலுவலகங்களுக்காக எந்த மதிப்பீடோ அல்லது திட்டமோ சமர்ப்பிக்கப்படாது கட்டிடத் திணைக்களத்திற்கு அந்த இரண்டு கட்டிடங்ளையும் உள்ளடக்கிய 5 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2012 யூலை 13 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவு குழுக்களின் ஆகக்கூடிய எல்லையைக் காண்பிக்கின்ற பட்டோலையின் பிரகாரம் ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட அல்லது சமமான பெறுமதியுடன் உள்ள பிரதான ஒப்பந்த வேலைக்காக அமைச்சு கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக இந்தக் கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக திணைக்கள கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) அரசாங்க கொள்வனவுக் குழுவின் 3.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் உள்நாட்டு நிதி வழங்கப்படுகின்ற செயற்திட்டத்திற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமைக்கு உரித்தாக்கப்பட வேண்டிய போதிலும், தொழில் திணைக்களத்தால் ஐந்து மாவட்ட தொழில் அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு சந்தை விலை ஒப்பீட்டு முறைமை (shopping) பின்பற்றப்பட்டிருந்தது.

(iv) இந்த சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் மூலம் கேள்விதாரர்களைத் தெரிவு செய்யவதாக இருந்த போதிலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் சந்தை விலை தளம்பல் முறைமையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய செயல் நடைமுறைகளின் படி ‘‘இக்டாட்’’ நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட 05 ஒப்பந்தக்காரர்களுக்குக் குறையாத எண்ணிக்கையில் முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த ஒப்பந்தத்திற்காக அழைப்பு விடுக்கப்பட்ட மூன்று கேள்விதாரர்களிடமிருந்து கோரப்பட்ட கூறுவிலைகளில் இரண்டு நிறுவனங்கள் மாத்திரம் கூறுவிலைகளை சமர்ப்பித்திருந்தது. இதனால் தரத்தில் கூடிய குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த ஒப்பந்த நிறுவனமொன்றை தெரிவு செய்யும் சந்தர்ப்பம் திணைக்களத்தால் இழக்கப்பட்டிருந்தது.

(v) இந்த நிர்மாணத்திற்காக 2012 மே 10 ஆந் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கட்டிட நிர்மாணங்களின் போது

குறைந்த கிரயத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டிட திட்டங்களுக்கு இணங்க உரிய நிர்மாணச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியமை அறிவுறுத்தப்பட்டிருந்தும் அதற்கு முரணாக அதிக கிரயத்துடனான மதிப்பீடு மற்றும் கட்டிட வரைபடத் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

(vi) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.1.1 ஆம் வழிகாட்டியின் படி செயற்திட்டமொன்று குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்டமையை உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு செயற்பாடுகளினதும் கொள்வனவு கால அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் சட்டரீதியாக நாளது வரையாக்குதல் கொள்வனவு நிறுவனத்தின் பொறுப்பாக இருந்த போதிலும், இந்த நிர்மாண ஒப்பந்தங்களுக்காக கொள்வனவு கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் சகல தொடர்புடைய செலவினங்களையும் உள்ளடக்கிய மொத்தக் கிரய மதிப்பீடொன்று கொள்வனவு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு திணைக்களத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டு நாளதுவரையாகப் பேணப்பட வேண்டிய போதிலும் இந்தக் கட்டிட நிர்மாணத்திற்கான மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற அவிஸ்ஸாவெல்ல மாவட்ட தொழில் அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரித்து தொழில் திணைக்களத்திற்கு 2015 ஏப்ரல் 21 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) நீர்கொழும்பு தொழில் அலுவலக நிர்மாணத்திற்காக 2014 திசெம்பர் மாதம் வரையில் அளவிடைப் பத்திரம் பரீட்சிக்கப்படாமலும் வேலைத்தள நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்படாமலும் கட்டிடத் திணைக்களத்திற்கு ரூபா 45,782,710 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(x) நீர்கொழும்பு தொழில் அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றும் போது அந்தக் கட்டிடத்தில் காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கமுடியுமான பொருட்களின் பெறுமதி ரூபா 590,910 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஏப்ரல் 21 ஆந் திகதி வரையும் இந்த பொருட்கள் சொத்தாகக் கருதி சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) 2011 ஆம் ஆண்டின் போது நிர்மாண நடவடிக்கைகளுக்காக அனுமதி 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வினால் அந்த வேலைத்தளம் பரீட்சிக்கப்பட்ட 2014 திசெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் அதில் முதலாவது கட்டிடத்தின் கொங்கிரீட் கட்டமைப்பு (Concrete Structure) மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**4.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------

தொழிலாளர் பரிசீலனை முறைப்பாடுகள் மற்றும் வழக்கு கணனி மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் என்பன 2010 ஆம் ஆண்டின் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஒத்துழைப்புடன் திணைக்களத்தால் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும் அமுல்படுத்துவதற்கும் திணைக்களம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது செலவிடப்பட்ட ரூபா 39,091,100 தொகையானது சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.

**4.10 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

------------------------------------------------------------

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளிலிருந்து சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தால் சீர் செய்யப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2013 | 5.1(ஈ) | ஊழியர் சேமலாப நிதியத்தின் செலவினங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை. |
| 2013 | 5.5 | அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை |
| 2013 | 6.3(i) | திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு அதன் அச்சகத்திற்கு கையளிக்கப்பட்ட ரூபா 4,674,100 பெறுமதியான அச்சிடல் பொருட்கள் அச்சகத்தின் இருப்புப் பதிவேட்டில் பொருள் பெறுவனவு மற்றும் விநியோகித்தலாக பதியப்படாமை. |
| 2013 | 6.3(ii) | வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பாக மெய்மையாய்வுச் சபை ஒவ்வொரு வாகனத்திற்குமான வெவ்வேறு அளவுகள் பயன்படுத்தப்பட்டும் வெளிப்படைத் தன்மையின்றியும் ஒவ்வொரு வாகனத்திற்கான எரிபொருள், லீற்றர் ஒன்றில் ஓடப்படும் கிலோமீற்றர் அளவு பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை. |
| 2013 | 6.4(ஆ)(iv) | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனைக்காக நியமிக்கப்பட்ட மெய்மையாய்வு சபைக்கு கடமை கையளிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் 53 வாகனங்கள் அதாவது 57 சதவீத அளவு மாத்திரம் பரீட்சிக்கப்பட்டமை. |

| | | |
|---|---|---|
| 2013 | 6.6 | HEIDELBERG - GTO - 52-1 வகையான அச்சிடல் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு செயற்தினாகவும் வினைத்திறனானகவும் அந்த இயந்திரம் பயன்படுத்தப்படாமை |

**4.11 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வட கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் 2015 பெப்ரவரி 11 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 38,953,704 தொகையான பங்களிப்புப் பணம் மற்றும் 280 மிகைக் கட்டணம் அறவிடக்கூடிய சந்தர்ப்பங்கள் மற்றும் ஊழியர் பணிக்கொடை மற்றும் ஏனைய 27 வழக்குகளிலிருந்து ரூபா 9,829,418 இனை அறவிடுவதற்காக எடுக்கப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வடகொழும்பு தொழில் அதிகாரப் பிரதேசதத்திற்குரிய 17 தொழில் தருனர் நிறுவனங்களில் ரூபா 3,776,618 நிறுவனப் பங்களிப்புப் பணம் மற்றும் மிகைக் கட்டணமாக அறவிடுவதற்கு 02 சட்ட செயற்பாட்டுக் கட்டளை அனுப்பி 14 நாட்களுக்குள் பணம் செலுத்தாத நிறுவனத்திற்கு இறுதிக் கட்டளை அனுப்பப்படாத 17 சந்தர்ப்பங்களும் ரூபா 35,809,694 தொகையான நிலுவைப் பங்களிப்புப் பணம் மற்றும் மிகைக் கட்டணமாக அறவிடுவதற்காக சிவப்புக் கட்டளை அனுப்பி 14 நாட்களுக்கும் கொடுப்பனவு செய்யப்படாத நிறுவனங்களிற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாத 38 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும் பங்களிப்புப் பணம் மற்றும் மிகைக் கட்டண அறவிடல்களின் தாமதத்தினால் ஊழியர்களுக்கு உரித்தாக வேண்டிய நலன்கள் இழக்கப்படும் அபாயம் காணப்பட்டது.

(இ) தவணைப்பணம் செலுத்துவதைப் புறக்கணிக்கின்ற நிறுவனங்களுக்காக நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்தல் அல்லது தவணையாக மீள அறிவித்து அறவிடுவதற்கு முயற்சி எடுக்கவேண்டியிருந்த போதிலும் கொடுப்பனவைப் புறக்கணித்த 11 தொழில் தருனர் நிறுவனங்களினால் செலுத்தவேண்டிய ரூபா 2,382,164 தொகை தவணைப் பணமாகச் செலுத்துவதற்கு தொழில்

ஆணையாளர் நாயகத்தினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதனைப் புறக்கணித்தல் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது தவணைப் பணத்தை அறவிடுவதற்கோ 2015 சனவரி 27 ஆந் திகதி வரையிலும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வடகொழும்பு மாவட்ட தொழில் அதிகாரப் பிரதேசதத்தில் அமைந்துள்ள 12 வலயங்களுக்குரிய நிறுவனங்களுக்கிடையே முறையான பரிசோதனையின்றி செயற்பாடற்ற நிறுவனங்களாக இனங்காணப்பட்ட 3050 கோவைகள் அளவில் காணப்பட்டதுடன், மூடப்பட்ட நிறுவனங்களின் ஊழியர்களுக்கு உரித்தான படிகள் செலுத்தப்பட்டிருந்ததா என கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) வடகொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு 2015 மார்ச் 04 ஆந் திகதி கிடைத்த ரூபா 1,335,914 கூட்டுத்தொகையான பணம் உரிய உரித்தாளர்களுக்கு வழங்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகையில் ரூபா 340,141, ரூபா 75,600, ரூபா 616,368 மற்றும் ரூபா 68,820 தொகைகள் முறையே 5,4,3 மற்றும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட அனுப்பப்பட்ட பணமாகும்.

## 4.12 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைககளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | நிரேஷ்ட நிலை | 205 | 147 | 58 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 667 | 408 | 259 | - |
| (iii) | இரண்டம் நிலை | 1,497 | 1,278 | 219 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 443 | 423 | 20 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 5 | - | 5 |
| | மொத்தம் | 2,812 | 2,261 | 556 | 5 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 556 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) இரண்டாம் நிலையில் ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடக்கிய 2 எழுதுவிளைஞர் பதவிகள் மிகையாகக் காணப்பட்டதுடன் அதற்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினருக்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்ட மனிதவளங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| தொழில் உத்தியோகத்தர் | 1 | தேசிய ஊழிய கற்கை நிறுவகம் | 2014.08.26 ஆந் திகதி முதல் 2015.06.19 ஆந் திகதி வரை |
| தொழில் உத்தியோகத்தர் | 1 | தேசிய ஊழிய கற்கை நிறுவகம் | 2011.02.14 முதல் 2015.01.25 ஆந் திகதி வரை (ஓய்வுபெற்ற) |
| மனித வள உத்தியோகத்தர் | 1 | தேசிய ஊழிய கற்கை நிறுவகம் | 2014.08.26 ஆம் திகதி முதல் 2015.06.19 ஆந் திகதி வரை |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 1 | தேசிய ஊழிய கற்கை நிறுவகம் | 2002.01.01 ஆந் திகதி முதல் 2015.06.19 ஆந் திகதி வரை |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 1 | தேசிய ஊழிய கற்கை நிறுவகம் | 2004.05.03 ஆந் திகதி முதல் 2015.06.19 ஆந் திகதி வரை |